மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2055 ஸ்ரீ சோபகிருது வருடம் பங்குனித்திங்கள் 30 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 354/2023 -ல்**

**அசல் வழக்கு எண். 13/2013**

டாக்டர்.எஸ்.ஆர்.வி.தங்கமணி

.... மனுதாரர்/ வாதி

**// எதிர்//**

கோவிந்தராஜன் ..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V. ரவிச்சந்திரன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு. S. உதயகுமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப் பட்டுள்ள கிரய ஆவணம் எண். 1620/1997-ல் காணும் 4 வது முத்திரைத்தாளையும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி முன்னிலைப்படுத்த (Notice to produce the Document) உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 12 விதி 8 மற்றும் 151 -ன் கீழ் மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கானது பிரதிவாதிக்கு எதிராக ஆவண எண். 1620/1997 ஆக ஏற்பட்டுள்ள கிரய சாசனம் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கோரியும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் நிரூபண வாக்குமூலத்துடன் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. தற்போது ஆவணங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ள இடைநிலை மனுவில் 30.08.1996 ல் ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட ஆவணமான ஆவண எண். 1620/1997 ஐ முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள ஆவணத்தைப் பொறுத்துதான் செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணமானது சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவுக்காக தாக்கல் செய்யப்பட்ட போது மனுதாரரின் கையொப்பம் இல்லை என்பதால் அது முடிவுறா ஆவணம் என்று கண்டு மன்னார்குடி சார்பதிவாளர் அவர்களால் பதிவு செய்ய மறுக்கப்பட்டது.

அதன் பின்னர் நாகப்பட்டிணம் மாவட்ட பதிவாளர் அவர்களிடம் மேற்படி ஆவணத்தில் மோசடியாக கையொப்பம் முன்னிலைப்படுத்தப்பட்டு, மாவட்ட பதிவாளர் அவர்களால் விசாரணை மேற்கொள்ளப்பட்ட போது மேற்படி ஆவணத்தை Expert opinion-க்கு அனுப்பவேண்டும் என்று கேட்டபோது எந்தவித விபரமும் வழங்காமல் ஒருலைப்பட்சமாக வழங்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தின் உத்தரவின் அடிப்படையில் மன்னார்ரகுடி சார்பதிவாளர் அவர்களால் கட்டாய பதிவிற்கு பதிவு செய்யப்பட்டது.

மேற்படி ஆவணத்தில் மொத்தம் நான்கு தாள்கள் உள்ளது என்று கண்டு மேற்படி ஆவணம் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் முத்திரையிடப்பட்டுள்ளது. ஆனால் தற்போது பிரதிவாதி தரப்பில் ஆவணத்தை

ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கண்டு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள கிரய ஆவணத்தில் மூன்று தாள்கள் மட்டுமே உள்ளது. நான்காவது தாள் மேற்படி கிரய பத்திரத்துடன் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேற்படி கிரய ஆவணத்தின் மொத்தமுள்ள 4 முத்திரைத்தாள்களையும் முன்னிலைப்படுத்தவேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் இருக்கிறது. ஆகவே, எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள கிரய ஆவணம் எண். 1620/1997-ல் காணும் 4 வது முத்திரைத்தாளையும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி முன்னிலைப்படுத்த (Notice to produce the Document) உத்தரவிடவேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-.</u>**

அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பில் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள தாக்கல் செய்துள்ள இடைநிலை மனு எண். 311/2023 மனுவில் பிரதிவாதி தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்வதற்கு 1 முதல் 12 வரை ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதில் 3 வது ஆவணமாக மனுதாரர்/வாதி கோரியுள்ள 30.08.1996 தேதியிட்டு வாதி, பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த அசல் கிரயபத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆவண முத்திரை 3 தாள்களில் 3 பக்கங்களில் 1 முதல் 3 வரை எழுதப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி முதல் தாள் பின்புறத்திலும், கடைசி தாள் பின்புறத்திலும் சார்பதிவக அலுவலக சார்பதிவாளர் முத்திரை இருந்து வருகிறது. அந்த ஆவணம் 5 பக்கங்களில் எண்டாஸ்மெண்ட் கொண்டவை. இதை தவிர வேறு ஆவணம் எதுவும் பிரதிவாதி வசம் கிடையாது. மேற்படி ஆவணம் ஐ.ஏ.311/2023 ஆக தாக்கல் செய்திருக்கும் ஆவணத்தில் முதல் வரியில் இருந்து கடைசி வரை 3 தாளில் எழுதப்பட்டிருக்கும். 4 வது தாளில் அந்த ஆவணங்களில் கிடையாது. ஆவணத்தின் முதல் முத்திரை தாளில் பின் பக்கத்தில் சார்பதிவாளர் மேற்படி ஆவணம் 4 தாள்களை கொண்டதாக

தவறுதலாக எழுதப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தின் சான்றிட்ட நகலை வாதி வழக்குரையில் தாக்கல் செய்துள்ளார். வாதி தரப்பில் மேற்படி ஆவணமானது 3 வது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டு சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள 30.08.1996 தேதியிட்ட கிரய பத்திரத்தையும், பிரதிவாதியின் இடைநிலை மனு எண்.311/2022 ல் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தையும் ஒப்பிட்டு பார்த்தால் தெரியவரும். மனுதாரர்/வாதி வழக்கை திசை திருப்பவேண்டும் என்ற நோக்கத்தில் 3 வது தாள் என்பதை 4 வது தாள் என கோரப்பட்டுள்ளது. ஆகவே, இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இரு தரப்பு வழக்கறிஞர்களின் வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5. இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

**<u>தீர்வு:-</u>**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, நிரூபண வாக்குமூலம், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

2. வாதி தரப்பில் மன்னார்குடி சார்பதிவக ஆவண எண்.1620/1997 கிரய சாசனம் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கோரியும், வாதிக்கு சொந்தமான சொத்துக்களைப் பொறுத்து பிரதிவாதி /எதிர்மனுதாரர் எவ்வித பாராதீனமும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி வாதி/மனுதாரரால்

இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** வாதி தரப்பில் விசாரணைகள் முடிவடைந்து பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் பிரதிவாதி/எதிர்மனுதாரரால் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 8 விதி 1ஏ(3)-ன் கீழ் மனு மற்றும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி/எதிர்மனுதாரரால் 30.08.1996-ல் பதிவு செய்யப்பட்ட கிரய சாசனம் அசல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் 3 தாள்கள் மட்டுமே உள்ளது. மனுதாரர்/வாதி தரப்பில் 30.08.1996-ல் பதிவு செய்யப்பட்ட கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் மொத்தம் 4 தாள்கள் இருப்பதாகவும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் 3 தாள்களை மட்டும் தாக்கல் செய்துள்ளதாகவும் கிரய ஆவண எண்.1620/1997-ல் காணும் 4 வது முத்திரைத்தாளையும் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கும்படி இம்மனுவினை மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ளார்.

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகலையும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த அசல் கிரய ஆவணமும் பரிசீலிக்கப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில் ஆவணத்தின் முதல் முத்திரைத்தாளில் பின்பக்கத்தில் சார்பதிவாளர் மேற்படி ஆவணம் 4 தாள்களை கொண்டதாக தவறுதலாக எழுதப்பட்டுள்ளதாகவும் முதல் தாள் பின்புறத்திலும், கடைசி தாள் பின்புறத்திலும் சார்பதிவக அலுவலக சார்பதிவாளர் முத்திரை இருந்து வருவதாகவும், வேறு எந்த ஆவணமும் பிரதிவாதி வசம் இல்லை என்றும் கூறியுள்ளார்.

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மனு மற்றும் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரை கிரய ஆவண எண்.1620/1997 ஆவணத்தில் அசல் மற்றும் சான்றிட்ட நகல் பரிசீலிக்கப்பட்டது. பிரதிவாதி/எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல்

செய்யப்பட்ட ஆவணத்தில் உள்ள பக்கங்களை தவிர வேறு ஆவணம் எதுவும் இல்லை என்று கூறியுள்ள நிலையில் 4 வது பக்கத்தை தாக்கல் செய்யும் படி உத்தரவு பிறப்பிக்க இயலாது. ஆனால் மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் மற்றும் அசல் ஆவணம் குறித்த உண்மை தன்மையை சாட்சிகள் விசாரணையின்போது மட்டுமே தீர்மானிக்க முடியும் என்பதால் நீதியின் நலன் கருதி மனுதாரர் /வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது முடித்து வைத்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, இம்மனுவானது முடித்து வைக்கப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று ( 12.04.2024) அவையறியப் பகரப்பட்டது.

(ஒ/ம்.A. சீதாலெட்சுமி)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
மன்னார்குடி. (மு.கூ.பொ)

<u>**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**</u>

**இருதரப்பிலும்** : இல்லை

(ஒ/ம்.A. சீதாலெட்சுமி)

மாவட்ட உரிமையியல் நீதிபதி

மன்னார்குடி. (மு.கூ.பொ)

-